# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

**SET 4**

**விடிவெள்ளி 4**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

பிரிவு அ **:** வழிக்காட்டிக் கட்டுரை
**[**பரிந்துரைக்கப்படும் நேரம் **30** நிமிடம்**]**

கீழே கொடுக்கப்பட்டுள்ள உரையாடல் வடிவத்தை மாற்றி அதனை ஓர் **உரைநடையாக** எழுதுக.

பள்ளி ஓய்வு வேளையின் போது குமரன் தமிழாசிரியரை ஆசிரியர் அறையில் சந்தித்து நல்ல நண்பர்களை எப்படி அடையாளங்காண்பது குறித்து உரையாடுகின்றான்.

குமரன் : வணக்கம் ஐயா.

ஆசிரியர் : வா குமரன். வணக்கம்.

குமரன் : ஐயா, நான் உங்களிடம் சில விவரங்களைக் கேட்டுப் பெற வேண்டும்.

ஆசிரியர் : தாரளமாகக் கேள் குமரா. எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்.

குமரன் : ஐயா, என் சக நண்பர்கள் அனைவரும் இயல்பாக என்னோடு பழகுகின்றனர். நாங்கள் மலாய், சீன மற்றும் இந்தியர் இனத்தவர்கள்; வெவ்வேறு பண்பாட்டினர். இவ்வாறு இருக்கையில், என்னால் அவர்களுள் நல்லவர்கள், தீயவர்கள் என்று கண்டறிவது பெரும் சிக்கலாக உள்ளது.

ஆசிரியர் : குமரா, நமக்கு நிறைய நண்பர்கள் இருப்பார்கள். இது இயல்பு. இவர்களுள் யார் நல்லவர், யார் கெட்டவர் என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் அவசியம். எளிதில் தெரிந்து கொள்ளலாம்.

குமரன் : வயதிலும் உருவத்திலும் பெரும் வித்தியாசமில்லாத நாங்கள் இனிமையாக அளவளாவுகின்றோம்; விளையாடும்போதும் உணவு உண்ணும்போதும் மகிழ்ச்சியே எங்களிடம் வெளிப்படுகின்றது. அதனால்தான் அச்சிக்கல் எனக்கு எழுந்துள்ளது.

ஆசிரியர் : உன் மன மயக்கத்திற்குச் சிறந்த தீர்வு உள்ளது. ஆம். நம்மோடு ஒளிவு மறைவு இல்லாமல் தூய அன்போடு கள்ளங்கபடு இல்லாமல் பழகுகின்றவர்களே நல்ல நண்பர்கள்.

குமரன் : ஓ... ஐயா, ஐயன் வள்ளுவர்கூட ஒரு குறளில் அதாவது,
“முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு” என்று கூறியுள்ளார். அதைதான் நீங்களும் கூறவந்தீர்கள் போலும். ஆனால், இன்னும் மாணவனாகிய நான், இயல்பு வாழ்க்கையில் இதனை அறிவது கடினமாக உள்ளது.

ஆசிரியர் : குமரா…. நாம் பல திட்டங்களைச் செய்யும் போது தனியாகச் செயல்பட முடியாத நிலை ஏற்படும். அத்தருணத்தில் நமக்கு நல்ல நண்பர்களின் ஆதரவு தேவை. நல்ல நண்பர்களின் சேர்க்கை நமது நடவடிக்கைகளையும் திட்டங்களையும் தங்குதடையில்லாமல் மேற்கொள்வதற்கு உதவுகின்றது. இதை வைத்துக்கூட நீ அறியலாம். புரிகின்றதா?

குமரன் : ஓ..ஓ….தெளிவான விளக்கம். இறுதியாக, நல்ல நண்பர்கள் எவ்வாறு நமக்குப் பயனளிப்பார்கள்?

ஆசிரியர் : நல்ல நண்பர்கள் தீய வழிகளில் செல்ல மாட்டார்கள்; தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாக மாட்டார்கள். அதனால், அவர்கள் நமக்கு நல்வழி காட்டுவார்கள். பொழுதை நல்ல வழியில் கழிப்பதற்கு நலமான பல நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவர். நலமான பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதால் நாம் நோய்நொடியின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

குமரன் : நல்ல விளக்கம் அளித்தீர்கள் ஐயா. என் ஐயம் தீர்ந்தது. நன்றி ஐயா. நான் சென்று வருகிறேன்.

ஆசிரியர் : நன்றி, நலமாகச் சென்று வா.

[30 புள்ளி]

**விடிவெள்ளி 4**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

**4** இன்றைய சூழ்நிலையில் இடைநிலைப்பள்ளி இந்திய மாணவர்களுக்குக் கட்டாயம் சமயக் கல்வி தேவை.

இத்தலைப்பில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

**விடிவெள்ளி 4**

**தனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பயிற்சி : 1**

**15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து உமது சொந்த மொழிநடையில் விளக்கம் எழுதுக.**

பொழுதைப் பொன்னென்றார்- விழிக்குள்ளே அதனைப்
வைத்தனரோ பலரும்?
அழுதே புரண்டாலும் அதுவருமோ மீண்டும்
அறிந்தால் பொழுதிங்கே புலரும்
பொழுதைப் பாழ்படுத்தி பழுதிங்கே பட்டோம்
விழித்திங்கு எழுதுவோம்
துளியே ஆனாலும் ஒளியாகும் வாழ்வில்
பொழுதே இறைவில்வரம் தொழுவோம்!

(எம்.கே.ஞானசேகரன்)

**விடிவெள்ளி 4**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பயிற்சி : 2**

15 *கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, உமது* **சொந்த மொழிநடையில் விளக்கம்** *எழுதுக.*

**தூக்கம்!**

தூங்காதே தம்பி தூங்காதே - நீ
சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!
நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்! - சிலர்
அல்லும் பகலும் தெருக்கல்லாய் இருந்துவிட்டு
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக் கொண்டார்
விழித்துக் கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார் - உன்போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்

— *பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்*

## மாதிரி விடை: பயிற்சி 1

காலத்தைப் பொன் போன்றது என்று கூறுவார்கள். காலத்தின் அவசியத்தை உணர்ந்தவர் பலர். காலத்தை ஒரு முறை தவற விட்டு விட்டால் நாம் எவ்வளவு அழுது புரண்டாலும் அது திரும்பவராது. இதனைத் தெரிந்து செயல்பட்டால் நாளைய பொழுது சிறப்பாகப் புலரும். நல்ல பொழுதைப் பாழ்படுத்தியதால் நாம் துன்பம் அடந்தோம். காலத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு நாம் செயல்பட வேண்டும். ஒரு மணித்துளி ஆனாலும் அதனைக் கவனமாகப் பயன்படுத்தினால் வாழ்வில் முன்னேற்றத்தைக் கொடுக்கும். காலம் என்பது இறைவன் கொடுத்த வரமாகும். எனவே, அதனைத் தொழுவோம்.